Registered as a Newspaper


றேடியன்ற் இன்ஸ்ரிரியூட்
புங்கன்குளம்.
தாவரவியல்: குகாதரன்
இரசாயனம்: J. S. R. மக்ஸி
விலங்கியல்: ஞானேந்திரன்
பௌதிகம் சத்தியசீலன்


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/=


றேடியன்ற் இன்ஸ்ரிரியூட்
புங்கன்குளம்
பொருளியல் - வரதராஜன்
கணக்கியல் - தனபாலசிங்கம்
வர்த்தகம் - ஜெயராமன்
அளவையியல் - S. S. மனோகரன்
தமிழ் - செல்வி மீரா
இந்து நாகரிகம் - திருமதி அருள் நங்கை
அரசியல் - பொன்னுண்டோ



சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு தை மீ உ 22 செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஐ. அவ். பிறை 24 (04.02.1986) UTHAYAN –A LIVELY TAMIL DAILY கதிர்: 67




யாழ் தேசிய மாணவர் மன்றம் நேற்று நடத்திய மாபெரும் பேரணியின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

## மாணவர்கள் பேரணி

—நல்லூர் செய்தியாளர்: க. இரத்தினராஜசிங்கம்

நல்லூர், பெப். 4
1000 மீற்றர் பாதுகாப்பு வலயத்தை எதிர்த்து பிரமாண்டமான பேரணி ஒன்று பாடசாலை மாணவர்களினால் நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டது.

இப் பேரணியில் யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள ...த்துக்கும் மேற்பட்ட பாடசாலைகள் கலந்து கொண்டன.

ஐயாயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் பேரணியில் கலந்து கொண்டனர்.

பேரணியை தேசிய மாணவர் மன்றம் ஒழுங்கு செய்திருந்தது.

காலை பத்து மணி அளவில் கண்டுக் குளியில்

(4–ஆம் பக்கம் பார்க்க)

### எழுப்பப்பட்ட கோஷங்கள்

நல்லூர், பெப். 4
நேற்றைய பேரணியில் ஒலித்த கோஷங்களும், கொண்டு சென்ற சுலோகங்களும் வருமாறு:

''கல்வியிலே கை

(4 ஆம் பக்கம் பார்க்க)

### பங்குபற்றிய பாடசாலைகள்

நல்லூர், பெப். 4
நேற்றைய பேரணியில் கலந்து கொண்ட சில பாடசாலைகள் வருமாறு:

கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ★ முல்லைத்தீவில் 8 ஆவது நாளாக சமர்

யாழ்ப்பாணம், பெப். 4
முல்லைத்தீவில் போராளிகளுக்கும் ஆயுதப்படையினருக்கும் இடையில் எட்டாவது நாளாக சண்டை நடந்தது.

ஆயுதப் படையினர் நேற்றுக் காலை முகாமிலிருந்து இரண்டு கவச வாகனங்களுடனும் ஒரு தண்ணீர் பவுசருடனும் நடை பவனியாக முல்லைத்தீவு வைத்தியசாலையை அண்மித்த பொழுது போராளிகள் ஆயுதப் படையினரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதை தொடர்ந்து ஆயுதப்படையினர் வாகனங்களுடன் மீண்டும் முகாம் திரும்பினர்.

அங்கிருந்து சரமாரியாக யுத்தக்களம் போல பீரங்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

ஹெலிக்கொப்டர்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### மின்கம்பத்தில் இஸ்ரவேல் பிரதமர்

யாழ்ப்பாணம், பெப் 4
''உலக மக்களின் உயிர்களை பலி எடுக்கும் பிணம் தின்னி இஸ்ரவேல் பிரதமரைப் பாரீர்'' என்ற சுலோகத்துடன் கூடிய இஸ்ரவேல் பிரதமரின் கொடும்பாவி ஒன்று யாழ் பஸ் நிலையத்துச்கு முன்பாக உள்ள மின்கம்பத்தில் நேற்று இரவு கட்டப்பட்டிருந்தது.

### குண்டுச் சத்தம்

யாழ்ப்பாணம், பெப். 4
நேற்று இரவு எட்டு மணி அளவில் யாழ். கோட்டைப் பக்கத்தில் இருந்து விட்டு விட்டு குண்டுச் சத்தங்கள் கேட்டன.

இராணுவத் தீர்வை நாடும்

# இலங்கையின் போக்கு: இந்தியாவுக்கு வேதனை

## சூழ்நிலை உகந்ததாக இல்லை என்கிறார் வெளியுறவு அமைச்சர்

லண்டன், பெப். 3
இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணப்படும் என்று இலங்கை அரசாங்கம் திரும்பத் திரும்ப உறுதி படக் கூறுகிறது.

இலங்கையின் இந்தப் போக்கு இந்தியாவுக்குப் பெரும் வேதனையைத் தருகிறது.

பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்கு உகந்த சூழ்நிலை எதுவும் தென்படவில்லை.

இவ்வாறு இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பலிராம் பகத் துபாய் விமான நிலையத்தில் வைத்துச் சொன்னார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவது சம்பந்தமான இந்தியாவின் அடுத்த நடவடிக்கை, இலங்கை அரசின் மனப் போக்கை அடிப்படையாகக் கொண்டே அமையும் என்று திரு. பகத் தெரிவித்தார்.

திரு. பகத் மேலும் தெரிவித்ததாவது:

இராணுவத் தீர்வு காணப்படும் என்று இலங்கை அரசாங்கம் திரும்பத் திரும்ப உறுதி படக் கூறுவது, தமிழர் குழுக்கள், இந்திய இனத் தலைவர்கள் மத்தியில் வேதனையை ஏற்படுத்தி உள்ளது.

இலங்கையில் இடம் பெறும் சமீபத்திய சம்பவங்கள் பேச்சுக்களுக்கும் தீர்வுக்கும் ஏற்றவை அல்ல.

இந்தியாவின் புதிய நடவடிக்கை இலங்கை அரசின் மனப்போக்கை அடிப்படையாகக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியாவில் 'முகமூடி நாடகம்' தொடர்கிறது

யாழ்ப்பாணம், பெப். 4
வவுனியாப் பகுதியில் நேற்று தொடர்ந்து பத்தாவது நாளாக முகமூடி நபர்களுடன் ஆயுதபடையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இவர்கள் வவுனியா

(4 ஆம் பக்கம் பார்க்க)

### மூதூரில் மோதல்

யாழ்ப்பாணம், பெப். 4
மூதூர்பகுதிகளில் ஆயுதப்படையினருக்கும் போராளிகளுக்கும் இடையிலான நேரடித் தாக்குதல் நேற்றும் இடம் பெற்றது.

ஆயுதப் படையினரின் இரண்டு பீரங்கிப் படகுகள் கடலில் இருந்து வேட்டுக்களைத் தீர்த்தன.

நேற்று நண்பகலில் இருந்து பலத்தசமர் அப்பகுதியில் நடைபெறுவதாக அறியப்படுகிறது.

### முச்சந்தி முனி



வருத்தக்காரருக்கு ''பிறசர்'' கூடிக் குறைந்து,கூடுறதுபோலை, இலங்கையின்ரை நேரம் ஒரு போக்காலை இந்தியாவுக்கும் ''பிறசர்'' ஏறி இறங்குது.

### ஹட்டனில் 2000 தமிழ் அகதிகள்

கொழும்பு, பெப். 4
கடந்த சில நாட்களாக நடைபெறும் வன்முறை சம்பவங்களை அடுத்து ஹட்டன் இந்துமகாசபையில்சுமார் 2,000 தமிழர்கள் தஞ்சம் அடைந்துள்ளனர்.

# புதைந்த வாகனங்களை இராணுவம் மீட்டது

## முகாமுக்கு திரும்பும் வழியில் பல கண்ணிவெடிச் சம்பவங்கள்

கிளிநொச்சி, பெப். 4
கல்மடுப் பகுதியில் புதைந்த கனரக வாகனங்களைமீட்டுக்கொண்டு இராணுவத்தினர் ஞாயிறு இரவு முகாமுக்குத் திரும்பினர். திரும்பும்வழியில் ஆங்காங்கே பல கண்ணிவெடிச் சம்பவங்கள் இடம்பெற்றன. அப்பொழுது இரண்டு கவசவாகனங்கள் சேதம் அடைந்தன.

புதைந்த கனரக வாகனங்களை மீட்க முடியாத நிலையில் நான்கு நாட்களாக இராணுவத்தினர் கல்மடுப் பகுதியில் நிலை கொண்டிருந்தனர்.

அவர்கள் முகாமுக்குத் திரும்பியபோது பல இடங்களில் குண்டுத்தாக்குதல்களும் துப்பாக்கிச் சூடுகளும் இடம்பெற்றன. பலர் இறந்தும் காயமடைந்தும் உள்ளனர்.

வட்டக்கச்சியில் கதிரவேலு என்பவரது இரண்டு புதல்வர்களும், தருமபுரத்தில் திருமேனி என்பவரும் காயத்துக்குள்ளாகி இறந்தனர்.

தருமபுரத்தைச் சேர்ந்த எஸ். சுப்பிரமணியம், கிளிநொச்சியைச் சேர்ந்த எஸ், சண்முகம், திருவையாற்றைச் சேர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### கினிகத்தேனை நகரில் ஊரடங்கு

கொழும்பு, பெப். 4
கினிகத்தேனை நகரிலும் ஊரடங்குச் சட்டம் நேற்று பிற்பகல் 3 மணி முதல் அமுலுக்கு வந்தது.

தமிழ் இளைஞர் ஒருவர் கொலையுண்டதைத் தொடர்ந்து தான் இந்த ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

இன்று காலை வரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும்.

## மட்டக்களப்பில் முஸ்லிம்கள் ஹர்த்தால்

### தமிழர்களும் ஆதரவு

மட்டக்களப்பு, பெப். 4
மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

ஜெருஸலத்தில் அல் அக்ஸா பள்ளிவாசலில் இஸ்ரவேலர்கள் நடத்திய அட்டூழியத்தைக் கண்டித்து இந்த ஹர்த்தால் அனுட்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு நகரில் உள்ள தமிழ் வர்த்தகர்களும் இந்த ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்து கடை அடைப்புச் செய்தனர்.

ஓட்டமாவடி, வாழைச்சேனை, ஏறுவூர், காத்தான்குடிப் பகுதி முஸ்லிம்கள் பூரண ஹர்த்தாலை நடத்தினர்.

# பேச்சுவார்த்தைக்கு ஏற்ற நேரம் அல்ல!

## ரொமெஷ் பண்டாரி

சென்னை, பெப். 3
பேச்சுவார்த்தைக்கு ஏற்ற சாதகமான சூழ்நிலை தற்சமயம் இல்லை.

இப்படி இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ்பண்டாரி சென்னையில் தெரிவித்தார்.

திம்புப் பேச்சுக்கள் முறிவடைந்ததற்கான காரணம் இலங்கையில் தமிழர் அச்சமயம் படுகொலை செய்யப்பட்டதே ஆகும்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் உடன்பாடு காணப்படுவதையே இந்தியா வலியுறுத்துகின்றது. இராணுவத்தீர்வு காணுவதற்கு இந்தியா உடன்படாது.

இப்படி திரு பண்டாரி சொன்னார்.

இலங்கை அரசு சமர்ப்பித்த பதில், கூட்டணியின் மாற்று யோசனைகளில் குறை காணுவதாகதான் அமைந்துள்ளது என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் சொன்னார்.

### டாக்டர்களுக்கு ஆயிரம் ரூபா அலவன்ஸ்

கொழும்பு, பெப். 4
சகல டாக்டர்களுக்கும் அவர்களது சம்பளத்துடன் மாதாந்தம் ஆயிரம் ரூபா இடைக்கால அலவன்ஸாக வழங்கப்படும்.

இதனை அரசாங்கம் நேற்று அறிவித்தது.

## வயலில் படுக்கும்படி கூறிவிட்டு சுட்டனர்

### முல்லைத்திவு பயங்கரம் பற்றி தகவல்

நல்லூர், பெப். 4
என்னைக் கட்டிவைத்துச் சுட்ட சிருடையினர் எனக்கு முன்னால் படுத்திருந்த மேலும் இரண்டு பேரைச் சுட்டனர். எனக்கு சூடு காலில்பட்டது. அதனால் காலில் காயம் ஏற்பட்டது மயிரிழையில் உயிர் தப்பினேன்.

படுத்திருந்தவர்களில் ஒருவர் எனக்கு முன்னாலேயே துடிதுடித்து இறந்தார். மற்றையவரும் பின்னர் இறந்துவிட்டார் என்று அறிந்தேன்.

கடந்த சனிக்கிழமை பிற்பகல் 4 30 மணி அளவில் முல்லைத்திவு கரைச்சிக்குடியிருப்பில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான வன்னியசிங்கம் சொக்கநாதன் (வயது 25). காலில் காயத்துடன் யாழ். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவர் தனக்கு நடந்த சம்பவம் பற்றி எமது செய்தியாளரிடம் தெரிவித்ததாவது:

கடந்த சனிக்கிழமை முல்லைத்திவிலிருந்து கரைச்சிக்குடியிருப்பு நோக்கி எனது அண்ணனுடன் சைக்கிளில் போய்க்கொண்டு இருந்தேன்.

அப்போது செல்லத்துரை என்பவர் எங்களை வழிமறித்து அங்கு ஆமிக்காரர்கள் நிற்கிறார்கள் போகாதீர்கள் என்றார்.

இருந்தும் நான் சைக்கிளை விட்டிறங்கி வயல் வெளிகள் ஊடாக விட்

(4–ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு வருட காலத்தில் முடிவு கட்டி விடுவாராம்

### ஜனாதிபதி சுதந்திர தினசெய்தி

கொழும்பு, பெப். 4
இன்னும் ஒரு வருடத்தில் பயங்கரவாதத்துக்கு முடிவு கட்டுவோம்.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன தனது சுதந்திர தினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் 38ஆவது சுதந்திரதினத்தை ஒட்டி ஜனாதிபதி செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தனபுரவில் இலங்கையின் சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் இன்று நடைபெறுகின்றன.

கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

நகரில் ஆயுதந் தாங்கிய பொலீஸார் காவல் புரிகின்றனர்.

### சுபநேரம்

4.2.1986
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
11.05முதல் 12.35 வரை
ராகுகாலம்:
3 35 முதல் 5.05 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## தோட்டத் தொழிலாளருக்கு எதிரான வன்செயல்களில் பாதுகாப்புப் படையினர்

### ஜனாதிபதியிடம் தொண்டமான் முறையீடு

கொழும்பு, பெப். 4
மலையகத்தில் பாதுகாப்புப் படையினரில் சிலர், தோட்டத்தொழிலாளர்களுக்கு எதிரான பலாத்காரச் செயல்களுக்கு உதவி புரிந்தனராம்.

நேற்று அமைச்சர் தொண்டமான் தலைமையிலான இ.தொ.கா. தூதுக்குழு ஜனாதிபதியின் கவனத்துக்குஇந்த விஷயத்தைக்கொண்டு வந்ததாகத்தெரியவருகிறது.

அமைச்சர் தொண்டமானுடன் பொதுச்செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமியும் சென்று இருந்தார்.

இச் சந்திப்பின்போது தேசியபாதுகாப்புஅமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி, வெளிநாட்டு அமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீட்,பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர், முப்படைத் தளபதி ஆகியோரும் கலந்துகொண்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### பிரார்த்தனை போராட்டம் 13-ம் திகதி

நல்லூர், பெப். 4
12ஆம் திகதி நடைபெறவிருந்த பிரார்த்தனைப் போராட்டம் பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க 13 ஆம் திகதிக்கு பின்போடப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

(2) உதயன் - நாளிதழ் 04 . 02 . 1986 UTHAYAN — TAMIL DAILY

# அமெரிக்க நிபந்தனையை பி. எல். ஓ. நிராகரித்தது

## சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரிக்கை

ஜோர்தான், பெப்.3

பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் தொடர்பு வைப்பதற்கு அமெரிக்கா விதித்த நிபந்தனையை பலஸ்தீன இயக்கம் நிராகரித்துவிட்டது.

இஸ்ரவேலை அங்கீகரிப்பது சம்பந்தமான ஐ நா. வின் 242 தீர்மானத்தை பலஸ்தீன விடுதலை இயக்கம் முதலில் ஏற்கவேண்டும்.

இதுதான் அமெரிக்கா விதித்த நிபந்தனை.

பலஸ்தீனியர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப் படவேண்டும். அவர்களின் சுதந்திரம், தனித்துவம் பேணக்கூடியதாக ஜோர்தானுடன் சம்மேளனம் ஒன்றை அமைக்க அனுமதிக்கப் படவேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகளை அமெரிக்கா ஏற்கும் வரை அமெரிக்காவின் நிபந்தனையை ஏற்க முடியாது என்று பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் ஒருவர் ஜோர்தானில் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அமெரிக்காவின் உதவியுடன் தயாரிக்கப்பட்ட மத்திய கிழக்குப் பிரச்சினைக்கான உத்தேச சமரசத்திட்டம்பற்றி ஜோர்தான் மன்னருடன் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் பேச்சுக்கள் நடத்தினர்.

இதனிடையில் மத்திய கிழக்குப் பிரச்சினை சம்பந்தமான உத்தேச சர்வதேச மாநாட்டுக்கு தீர்மானம் எடுக்கும் அதிகாரம் எதுவும் இருக்காது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவும் இஸ்ரவேலும் இது சம்பந்தமாக உடன்பாடு கண்டுள்ளன.

இத்தகவலை இஸ்ரவேல் பிரதமர் ஷிமொன் பெரெஸ் வாரந்திர அமைச்சரவைக் கூட்டத்தில் வெளியிட்டார்.

இதுசம்பந்தமாக அமெரிக்க ராஜாங்க அமைச்சு அதிகாரி றிச்சார்ட் மர்பியுடன் பேச்சுக்கள் நடத்தியதாகவும் பிரதமர் சொன்னர்.

## அமெரிக்காவிடம் விமானங்கள் கைவசம் இல்லை

வாஷிங்டன், பெப்.3

ஐரோப்பா, மத்திய கிழக்கு ஆகிய இடங்களில் யுத்தம் ஒன்று ஏற்பட்டால் உடனடியாக துருப்புக்களை அனுப்புவதற்கு தேவையான அளவு விமானங்கள் அமெரிக்காவிடம் கைவசம் இல்லையாம்.

'ஹெறிரேஜ் பவுண்டேஷன்' என்ற ஆய்வு நிறுவனம் நடத்திய ஆராய்ச்சியின் முடிவில் தகவல் வெளியிடப்பட்டது.

அப்படி ஒரு யுத்தம் ஏற்பட்டால் 2000 விமானங்களில் துருப்புக்கள் 10 தினங்களுக்குள் சண்டை நடக்கும் இடங்களில் கொண்டு போய் இறக்கப்பட வேண்டும்.

இப்படி ஆய்வு கூறுகின்றது.

## ஹொலிவூட் நடிகர் மேயர் பதவிக்கு

கலிபோர்ணியா, பெப். 3

ஹொலிவூட் நடிகர் கிளின்ட் ஈஸ்ட்வூட் கலிபோர்ணியாவில் உள்ள சிறு நகரம் ஒன்றின் மேயர் பதவிக்கு போட்டி இடுகின்றார்.

இதற்கான நியமனப் பத்திரங்களை அவர் கடந்த வாரம் தாக்கல் செய்தார்.

ஏப்ரல் 8ஆம் திகதி நடைபெறும் இத்தேர்தலில் நான் வெற்றியீட்டினுல் படங்களில் நடிப்பதைக் குறைத்துவிடுவேன் —

இப்படி 55 வயதான கிளின்ட் ஈஸ்ட்வூட் சொன்னர்.

## உகண்டா 9, 000 படை வீரர் சரண்

கம்பாலா, பெப். 3

பதவி கவிழ்க்கப்பட்ட உகண்டா இராணுவ அரசாங்கத்தின் படை வீரர்களில் 9,000 பேர் சரணடைந்துள்ளனர்.

உகண்டாவில் தேசிய கெரில்லாக்கள் இராணுவ ஆட்சியைக் கைப்பற்றிய பின்னரே இவர்கள் சரணடைந்தனர்.

## மத்திய கிழக்கு பிரச்சினை பற்றி ஆராய சர்வதேச மாநாடு

அம்மான், பெப். 3

மத்திய கிழக்குப் பிரச்சினை சம்பந்தமாக பூர்வாங்கரீதியில் சர்வதேச மாநாடு ஒன்றைக் கூட்டத் தயாராக இருப்பதாக அமெரிக்கா, பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு அறிவித்துள்ளது.

அமெரிக்க அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டதாக ஜோர்தான் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இப்பேச்சுவார்த்தையில் அமெரிக்கா, ஜோர்தான், இஸ்ரவேல், பலஸ்தீனப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று அந்த அமெரிக்க அதிகாரி சொன்னர்.

## வெளி உலகில்

### பிரச்சினைக்குரிய பாக் பகுதியில்

# இந்தியபடை குவிப்பு

புதுடில்லி, பெப். 3

இந்திய — பாக் எல்லையில் பிரச்சினைக்குரிய சியாசின் கிளேசியர் பிரதேசத்தில் இந்திய இராணுவத் துருப்புக்கள் பலமாக நிலைகொண்டுள்ளன.

பதவி விலகிய இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் ஏ.எஸ். வைத்தியா இத்தகவலை வெளியிட்டார்.

அந்தப் பிரதேசத்தில் இருந்து பாகிஸ்தானுல் எமது துருப்புக்களை ஓடச் செய்ய முடியாது என்றும் ஜெனரல் வைத்தியா சொன்னர்.

இந்தியா — பாகிஸ்தான் எல்லைத்தகராறில் இப்பிரதேசம் பிரச்சினைக்குரிய விஷயமாக இருந்து வருகிறது.

## 17 இந்தியர் கொல்லப்பட்டனர்

புதுடில்லி பெப். 3

வடயேமனில் அரச ஆதரவுப் படைகளுக்கும் கிளர்ச்சிப் படைகளுக்கும் இடையில் நடந்த மோதல்களின் போது அங்குதங்கியிருந்த 17 இந்தியப் பிரஜைகள் கொல்லப்பட்டனர்.

புதுடில்லியில் வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் இதனைத் [?] தெரிவித்தன.

## போராட்ட வீரருக்கு பென்ஷன்

சென்னை, பெப்.3

தமிழ்மொழிப் போராட்டங்களில் பங்குபற்றியவர்களுக்கு மாதாந்தம் பென்ஷன் வழங்கும் திட்டம் ஒன்றை தமிழ்நாடு அரசு பரிசிலனை செய்கிறது.

தமிழ் மொழிக்காக உயிர் துறந்தவர்களுக்கு பத்தாயிரம் ரூபா நன்கொடை வழங்கும் திட்டம் பற்றியும் தமிழ்நாடு அரசு ஆலோசித்து வருகிறது.

இத்தகவல்களைக் கல்வி அமைச்சர் திரு.சி. அரங்கநாயகம் சொன்னர்.

## ரஸமான நடிப்புக்கு 'ரம்யா கிருஷ்ணன்'

எடுத்த எடுப்பிலேயே ஏகோபித்தபாராட்டுதல்களுடன் திரைவானில் சிறகடித்துப் பறக்கஆரம்பித்து விட்டார் புது முகம் ரம்யா கிருஷ்ணன்.

'வெள்ளை மனசு' படத்தின் மூலம் திரை உலகில் காலடி வைத்த நடிகை ரம்யா கிருஷ்ணன் ஒரு அதிர்ஷ்டசாலிதான்.

முதல் படத்திலேயே கதாநாயகி வேடம். பெரிய தயாரிப்பு நிறுவனத்தின் படம்; நல்ல இயக்குநர். நகைச்சுவை நடிகர்களுடன் நல்ல நடிப்பு. இப்படியாருக்கும் கிடைப்பதில்லை.

சிறந்த இயக்குநரான பாரதிராஜாவின் டைரக்ஷனில் தன் மகள் நடிக்க வேண்டும் என்பதே ரம்யா கிருஷ்ணனின் தாயாரின் விருப்பம்.

ஆனுல், அது எளிதில் நிறைவேறி விடுமா என்ன?

இந் நிலையில் பிலிம்கோ நிறுவனத்தினர் நடிகை ரம்யா கிருஷ்ணனை கதாநாயகியாகப் போட்டு படம் எடுக்க முன்வந்தனர்.

அரைகுறை மனத்துடன் அதற்குச் சம்மதம் தெரிவித்தார் ரம்யாவின் தாயார்.

முதல்படம் பாரதிராஜாவினுடையதாக இல்லையே என்று கவலைதான். இருந்தாலும் திறமையைக் காட்டிச் சிறப்பாக நடித்தார் ரம்யா.

தன்னுடைய தரமான, துடிப்பான, ரம்மியமான, அருமையான நடிப்பால் பட உலகில் தனக்கென தனியான ஓரிடத்தைப் பெற்றுக் கொண்டு விட்டார், ரம்யா கிருஷ்ணன்

ரஸிகர்களின் 'ரஸமான நடிப்பு' என்ற பாராட்டையும் பெற்றுவிட்டார் ரம்யா கிருஷ்ணன்.

நல்ல நடிப்புத் திறமையும் அழகும் வாய்ந்த நடிகை ரம்யா கிருஷ்ணன். அவர்களுக்கு ரஸிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்புக் கிடைத்திருக்கிறது.

நம்பிக்கைதான் வெற்றியின் முதல்படி. இது திரையுலக மந்திரம். ஆமாம். நாளைய நம்பிக்கை நட்சத்திரம் தான் இன்றைய ரம்யா கிருஷ்ணன்.

தினசரி சினிமா

## ஐ. நா. காரியாலயம் ஞாயிற்றுக்கிழமையில் பூட்டு

### நிதி நெருக்கடி காரணமாம்

ஐ.நா, பெப்.3

ஐ.நா. தலைமைக் காரியாலயம் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பூட்டப்பட்டிருக்கும்.

இந்த நடைமுறை மார்ச் 16 வரை அமுலில் இருக்கும்.

சிக்கன நடவடிக்கையாகவே இது கடைப் பிடிக்கப்படுகிறது.

ஐ. நா. நிதி நெருக்கடிக்கு ஆளாகியுள்ளது. அதைத் தொடர்ந்துதான் இச்சிக்கன நடவடிக்கை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ. நாவுக்குக் கொடுக்கப்படும் நிதி உதவியை 25 இல் இருந்து 25 சதவீதமாகக் குறைக்கப் போவதாக அமெரிக்க அரசு அறிவித்துள்ளது.

அக்டோபரில் இருந்து இது அமுலுக்கு வரும், அப்போதுஐ.நா. மேலும் பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகும்.

## சமய அறிவுப் பரீட்சை 24 ஆம் திகதி நடத்த ஏற்பாடு

மானிப்பாய், பெப்.4

வண்ணர்பண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் சைவ சமய அறிவுப் பரீட்சை எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறும்

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக மேற்படி பரீட்சையை கழகம் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

பாலர் வகுப்பு, முதலாம் வகுப்பு ஆகியவற்றில் சென்ற ஆண்டு கல்வி கற்றோருக்கு நீதி நூல் மனனப் போட்டியும்–

இரண்டாம் வகுப்பு பயின்ருேருக்கு திருமுறை மனனப் போட்டியும்–

3, 4, 5 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சமய அறிவுப் பரீட்சையும்–

9 ஆம் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சமய அறிவுக் கட்டுரைப் போட்டியும் நடைபெற இருக்கின்றன.

மேற்படி போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 10 ம் திகதியாகும்.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு விசேட பரிசில்களும் 40 புள்ளிகளுக்கு மேல் பெறுபவர்களுக்கு சான்றுப் பத்திரமும் வழங்கப்பட உள்ளதாக மேற்படி பரீட்சைக்குப் பொறுப்பான செயலாளர் திரு. வி. கந்தசாமி தெரிவித்தார்.

### ஆசிரியர் நியமனம்

## ஊர்காவற்றுறைவாசிகள் சொந்த இடத்தில் பணிபுரிய வாய்ப்பு ஏற்படும்

யாழ்ப்பாணம், பெப் 4

ஆசிரியசேவை முன் பயிற்சியை முடித்துக் கொண்ட ஊர்காவற்றுறை வாசிகளுக்கு வேறு இடங்களுக்கு நியமனம் வழங்கப்பட்டிருந்தாலும் அவர்கள் விரும்பினுல் தமது சொந்த இடத்திற்கு நியமன மாற்றம் பெற்றுக்கொள்ளலாம்.

கல்விச் சேவை ஆணைக் குழுச் செயலாளருடன் தொடர்பு கொண்டு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இதற்கான வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறது.

ஊர்காவற்றுறை வாசிகள் தமது இடத்திற்கே நியமனம் பெறவிரும்பின், தங்களது நியமனக் கடிதம், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபரின் கடிதம் ஆகியவற்றை கல்விச்சேவை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்து தமது நியமன மாற்றங்களைச் செய்து கொள்ளலாம்.

இத்தகைய தகுதியுடையவர்கள் இரண்டு கடிதங்களையும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் யாழ்ப்பாணப் பணிமனையில் ஒப்படைத்தால் அவர்களது நியமன மாற்றங்களுக்கான ஏற்பாடுகளை சங்கமே செய்து கொடுக்கும். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. த. மகாசிவம் உதயனுக்கு இந்தத் தகவல்களைத் தெரிவித்தார்.

மினி சினிமா

நவா மினி
(உஷா மினி முன்பாக)
★ புதிய வெளியீடு
The Dirty Dozen
NEXT MISSION
வயது வந்தவர்களுக்கு மட்டும்
முழுக்க, முழுக்க தாக்குதல் நிறைந்த மிகச் சிறந்த படம்,
முதன் முதலாக எமது மினியில் மட்டுமே காண்பிக்கப்படுகிறது.

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

# சிமெந்துஆலை சம்பவம் மிலேச்சத் தனமானது

### கீரிமலை பிரஜைகள்குழு பிரதமருக்கும் பாதுகாப்பு அமைச்சருக்கும் கடிதம்

காங்கேசன்துறை,பெப்.4

காங்கேசன்துறை சிமெந்து ஆலையில் இடம்பெற்ற சம்பவம், பாதுகாப்புப் படையினரின் மிலேச்சத்தனத்தை எடுத்துக் காட்டுகிறது.

கீரிமலை பிரஜைகள் குழு மேற்கண்டவாறு வன்மையாக கண்டனம் தெரிவித்துள்ளது.

இச் சம்பவம் குறித்து பிரதமர், தேசிய பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்கு கீரிமலை பிரஜைகள் குழுத் தலைவர் திரு. க. சுந்தரமூர்த்தி கடிதம் அனுப்பி வைத்துள்ளார்

அதில் தெரிவிப்பதாவது:–

கடந்த 29 ஆம் திகதி சிமெந்து ஆலையில் தொழிற்சாலை முகாமையாளரின் அறையினுள் புகுந்து துப்பாக்கியைக் காட்டி பலவந்தமாக அவரை வாகனத்தில் ஏற்றிச் சென்றது, பாதுகாவல் உத்தியோகத்தரை வெயிலில் கட்டிப் போட்டது ஆகிய செயல்களில் ஈடுபட்டதன் மூலம் பாதுகாப்புப் படையினரின் அராஜகத் தன்மை வெளிக்காட்டப் பட்டுள்ளது.

இப்படியான காட்டுமிராண்டித்தனமான செய்கையில் ஈடுபடக் கூடாதென பாதுகாப்புப் படையினருக்கு உத்தரவு இடவேண்டும்.

சிமெந்து ஆலையில் இனியும் இப்படியான சம்பவங்கள் இடம்பெற இடமளிக்கக் கூடாது.

இப்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இருவர் விசாரணை

வவுனியா,பெப் 4

கடந்தவியாழக்கிழமை காலைவவுனியாவில் சுட்டு கொல்லப்பட்ட ஹோட்டல் உரிமையாளர் திரு. ஜெயரட்னவின் கொலை தொடர்பாக வவுனியா பொலீஸார் இருவரை விசாரணைக்குட்படுத்தியிருக்கிருர்கள்.

இருவரும் உரவர்த்தகர்கள் என்று கூறப்படுகிறது.

## முல்லைத்தீவில் காயம் அடைந்த மற்றும் ஒருவர்

நல்லூர், பெப். 4

முல்லைத்தீவில் நடந்த துப்பாக்கிச் சமரின் எதிரொலியாக காயமடைந்த செல்லையா சங்கரப்பிள்ளை (60 வயது) யாழ். பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

இவருக்கு கையிலும் காலிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

பொலீஸ் விடுதிக்கு தண்ணீர் 'பம்ப்' பண்ணிவிட்டு அறைக்குத் திரும்பிக்கொண்டிருந்த பொழுது சிருடையினர் இவரை நோக்கிச் சுட்டனராம்.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

## சாவகச்சேரி மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழா

சாவகச்சேரி, பெப்.4

சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா வித்தியாலய அதிபர் திருமதி கு.பரராசசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

யாழ் கல்வித்திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. ஆர் .சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகவும் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. அ. தங்கராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

இப் பரிசளிப்பு வைபவத்தில் அதிபரால் தெரிவிக்கப்பட்ட நூலகம் இல்லாத குறையை நிவிர்த்தி செய்வதற்கு முயல்வதாகக் கூறிய கல்வி அதிகாரி தமது சொந்தக் கோதாவில் ரூபா ஆயிரத்தை அன்பளிப்பாகவும் வழங்கினுர்.

### யாழ் மாவட்டத்தில் வீடமைப்புத் திட்டம்

## கிராமசேவகர் பிரிவுகளில் கூட்டுறவு ஐக்கிய நாணய சங்கங்கள், கடனுதவிச் சங்கங்கள்

யாழ்ப்பாணம் பெப். 4

யாழ் மாவட்ட வீடமைப்புத் திட்டத்தை அமுல் செய்வது தொடர்பாக கூட்டுறவு ஐக்கிய நாணயசங்கங்கள், கடனுதவிச் சங்கங்கள் கிராம சேவகர் பிரிவுகளில் அமைக்கப்படுகின்றன.

இயங்காத நிலையிலுள்ள சங்கங்களைப் புனரமைக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

[illegible] ஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. க. சண்முகலிங்கத்தின் பணிப்புரையின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வீடமைப்புத் திட்டம் பரீட்சார்த்த முறையில் யாழ் மாவட்டத்தில் பன்னிரண்டு கிராமசேவகர் பிரிவுகளில் அமுலாக்கப்பட உள்ளது.

இதற்கென முதலில் தெரிவாகியுள்ள 6 கிராம சேவகர் பிரிவுகள் [illegible] வாய், பொலிகண்டி, மல்லாகம், நீர்வேலி, நெடுந்தீவு மேற்கு, கைதடி மேற்கு.

வீடமைப்புக் கடன்கள் ஆகக் கூடிய தொகை ஏழாயிரம் ரூபாவுக்கு உட்பட்டதாகும். இது வசதி குறைந்தவர்களுக்கான கடனுகும். வீடமைப்புக் கடன் பெறும் தகுதியும் விருப்பும் உடையவர்கள் இச் சங்கங்களில் அங்கத்தவர்களாக வேண்டும்.

இவ்வாறு திரு. சண்முகலிங்கம் தனது சுற்று நிருபத்தில் குறிப்பிட்டு உள்ளார்.

## சண்டிலிப்பாயில் இலவச வைத்திய சிகிச்சை

மானிப்பாய் பெப்–4

சண்டிலிப்பாயில் உள்ள கிறீஸ்தவ தொடர்புகள் நிலையத்தில் ஒவ்வொரு வியாழக்கிழமையும் மாலை மூன்று மணிக்கு நோயாளர்களுக்கு இலவச வைத்திய சிகிச்சை அளிக்கப் படுகிறது.

மானிப்பாய் மெமோரியல் ஆங்கில வைத்திய சாலையில் கடமையாற்றும் டாக்டர் தயாளன்அம்பலவாணர், டாக்டர் விஸ்வலிங்கம் ஆகியோர் நோயாளர்களை பரிசோதனை செய்து இலவசமாக வைத்திய ஆலோசனைகள் வழங்கி வருகின்றனர்.

பிரஸ்தாப இரு டாக்டர்களும் ஊழியர்களும் ஒவ்வொரு திங்கட் கிழமையும் மாலை மூன்று மணிக்கு உடுவில் தெற்கு சத்தியபுரம்- நிலையத்திலும் இலவச வைத்திய சேவைகளை வழங்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மண்வெட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.4

யாழ் மாவட்ட விவசாயிகளுக்கு தேவைப்படும் யாழ்ப்பாணரக மண்வெட்டிகள் கமநல நிலையங்கள் ஊடாக வழங்கப்பட உள்ளன.

## நீத்தார் புகழாரம்

— செனட்டர் இராசேந்திரா —

தோன்றில் புகழொடு தோன்றுக என்ற வாக்கியத்திற்கமைய வாழ்ந்து காட்டிய பெருந்தகை முன்னுள் செனட்டர் அமரர் முதலியார் ஏ. பி. இராசேந்திரா. அவர் மறைந்து 23 வருடங்கள் மறைந்துவிட்டபோதிலும், அவர் தமிழ்கூறும் நல்லுலகிற்கும் சிறுபான்மைத் தமிழர்களின் முன்னேற்றத்திற்கும் நல்வாழ்விற்கும் ஆற்றிய சேவைகள் என்றென்றும் அவரை நினைவு கூரும்.

அவரின் உத்தியோகத் திறமையையும் சமூக சேவையையும் நன்குணர்ந்த அரசாங்கம் ஆரும் ஜோர்ஜ் மன்னரின் பிறந்த தினமான 1941ஆம் ஆண்டு ஆனி மாதம் 12ஆம் திகதி ''முதலியார்'' என்னும் கௌரவ பட்டத்தை வழங்கிப் பெருமைப்படுத்தியது.

அமரர் இராசேந்திரா தன்னலமின்றி எச்சமூகத்தவரினதும் முன்னேற்றத்திற்காக இரவும் பகலும் உழைத்த பரித்தியாகி. சிறுபான்மை சமூக மக்களின் முன்னேற்றம் அவர்களின் சேவை ஆகியவற்றைக் கவனிப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்ட சிறுபான்மைத் தமிழர் மகாசபையை வழிநடத்தி அதன் தலைவராகவும் பதவி வகித்து அரும்பணியாற்றினுர்.

1947 ஆம் ஆண்டு இலங்கையில் அரசியல் மாற்றம் ஏற்பட்டு நாடாளுமன்றம் அமைக்கப் பட்டபோது அன்றைய கவனர் ஜெனரல் சோல்பரிப் பிரபு அமரர் இராசேந்திராவைச் செனட்டராக நியமித்தார்.

அவரது தேசியத் தொண்டின் ஆற்றலைப் பாராட்டி இரண்டாம் எலிசபெத் மகாராணி 1953ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி எம். பி. ஈ. என்னும் கௌரவ பட்டத்தையும், பட்டாபிசேஷ் ஞாபகச் சின்னப் பதக்கத்தையும் வழங்கினுர்.

16–06–1884 இல் பிறந்த முதலியார் இராசேந்திரா 22–1–1963 இல் அமரரானுர்.

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனுக விளங்கிய அமரர் இராசேந்திரா உண்மையான தேசத்தொண்டராகவும் சீர்திருத்தவாதியுமாக விளங்கிய பெருந்தகையானர்.

- ஆ. மாணிக்கம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தர்மபுரம், கல்மடு பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேற்றம்

## பாடசாலைகள், கோயில்களில் தஞ்சம்

உருத்திரபுரம் பெப். 4

தர்மபுரம், கல்மடு நகரைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் தமது வீடு வாசல்களைவிட்டு வெளியேறி உள்ளனர்.

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம், கரவெட்டித்திடல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, நவஜீவனம் ஆகிய இடங்களில் மக்கள் தஞ்சமடைந்துள்ளனர்.

இது தவிர வட்டக்கச்சி சில்வா ரேட், அ. க. த. பாடசாலை, இராமநாதபுரப் பாடசாலை, ஆலயம் ஆகிய இடங்களிலும் மக்கள் தஞ்சமடைந்துள்ளனர்.

புளியம்பொக்கணை, கரவெட்டித்திடல் நவஜீவனம் முகாம்களில் தஞ்சமடைந்துள்ள மக்கள் உடுத்த உடுப்புடன் வந்திருப்பதாகவும், அவர்கள் தமது பொருள்கள் சகலவற்றையும் இழந்து வந்துள்ளதால் சாப்பாட்டுக்குக்கூட வழி இல்லாமல் இருக்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

இவர்களுக்கு உதவி வழங்கும்படி கிளிநொச்சி பிரஜைகள் குழுவிடம் கேட்கப்பட்டுள்ளது.

இந்த அகதிகளுக்கு வேண்டிய உதவிகளை உடனடியாக கவனிக்கும்படி கிளிநொச்சி பிரஜைகள் குழு முரசுமோட்டையிலுள்ள தமது கிளைக்குப் பணித்துள்ளது.

இதற்கிடையில் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஞாயிறு இரவு 7 மணிமுதல் திங்கள் காலை 10 மணிவரை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட போதும் கூட கிளிநொச்சி நகரம் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டது.

கடைகள் சில ஒற்றைக் கதவில் திறந்திருந்தன. கிளிநொச்சி பழைய பஸ் நிலையத்தில் மரக்கறிச் சந்தை ஓரளவுகூடியிருந்தபோதும் பொருள்கள் வாங்குவதற்குப் பொதுமக்கள் வரவில்லை.

பஸ்சேவை வழமைபோல காலை 10 மணிவரை இருந்தது. பிரயாணிகள் இல்லாததால் சில பாதைகளில் பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டன.

கிளிநொச்சி — யாழ்ப்பாணம் பஸ் சேவைகள் போதியளவு இருந்தபோதும் மிகக் குறைவான மக்களே பிரயாணம் செய்தனர்.

கிளிநொச்சி நகரைவிடப் பரந்தனில் மக்கள் நடமாட்டம் கூடுதலாக இருந்தது.

கடைகள் அனைத்தும் திறந்திருந்தன. சந்தையும் வழமைபோல் கூடி இருந்தது.



### பொய்யாமொழி

குறள்:

தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தியிருப்பச் செயல்.

பொருள்:

தந்தை தன்மகனுக்குச் செய்யத்தக்க நல்லுதவி, கற்றவர் கூட்டத்தில் தன்மகன் முந்தியிருக்கும்படியாக அவனைக் கல்வியில் மேம்படச் செய்தலாகும்.

அரசின் பதிலில்:

# தமிழரின் அடிப்படை

## பிரச்சினைகளுக்கே தீர்வு இல்லை

### அமிர் தகவல்

புதுடில்லி, பெப். 3

மாற்று யோசனைகளுக்கான இலங்கை அரசாங்கத்தின் பதில், அடிப்படைப் பிரச்சினைகளுக்கே தீர்வு காணுவதாக அமையவில்லை.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரியிடம் தெரிவித்தார்.

பிரதமர் ராஜீவ் காந்தியுடன் ஒரே விமானத்தில் சென்ற தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான திரு. அமிர்தலிங்கம், திரு. எம். சிவசிதம்பரம், திரு. இரா. சம்பந்தன் ஆகியோர், திரு. ரொமேஷ் பண்டாரியுடன் விரிவான பேச்சுக்களை நடத்தினர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்று யோசனைகளுக்கு இலங்கை அரசு சமர்ப்பித்த பதில் இப் பேச்சுக்களின் போது ஆராயப்பட்டன.

இலங்கைத் தமிழரின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குக் கூட தீர்வு காண முடியாத ஒன்றாக இலங்கை அரசின் பதில் அமைந்துள்ளதாக கூட்டணித் தலைவர்கள் திரு. பண்டாரியிடம் கூறினர்.

இதை ஏற்கமுடியாது என்றும் அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டனர்.

# இனியும் பொறுக்க முடியாது என்கிறார் இராணுவ அதிகாரி

யாழ்ப்பாணம், பெப் 4

முல்லைத்தீவுப் பகுதியில் தொடர்ந்து போராளிகள் மறைந்திருந்து முகாமில் உள்ள ஆயுதப்படையினரைத் தாக்குவதையும் நாசவேலைகளில் ஈடுபடுவதையும் இனியும் பொறுக்கப் போவதில்லை என்றும் இனி எந்தவித பாரதூரமான நடவடிக்கையையும் எடுக்கப் பின்வாங்கப் போவதில்லை என்றும் கொழும்பில் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அப்பகுதியில் உள்ள மக்களுக்கு ஏற்படும் எதிர்பாராத உயிர்ச் சேதங்களுக்குப் போராளிகளே பொறுப்பு எனவும் அவர் சொன்னார்.

# வெளிநாட்டு ஆசிரியருக்கு சம்பளம் கூடத்தான்; ஆனால் அவர்களைப் போல் சேவை ஆற்ற முடியுமா?

## வட்டாரக் கல்வி அதிகாரி கேள்வி

வட்டுக்கோட்டை, பெப். 4

வெளிநாடுகளில் ஆசிரியத் தொழில் செய்வோர் பெறும் சம்பளத்திற்கும் நம்நாட்டில் ஆசிரியத் தொழில் செய்வோர் பெறும் சம்பளத்திற்குமிடையே ஏற்றத்தாழ்வு இருப்பது உண்மைதான். அதேபோன்று சேவையிலும் ஏற்றத்தாழ்வு இருப்பதையும் நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

வெளிநாடுகளில் ஆசிரிய சேவை எப்படி நடைபெறுகிறது என்பதை ஆராய்ந்தால் அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் அதிகமானது என்று சொல்ல முடியாது.

அங்குள்ள ஆசிரியர்கள் செய்யும் வேலையை நம்நாட்டு ஆசிரியர்கள் செய்கிறார்களா? செய்தால் நிச்சயம் ஒருகாலத்தில் அவர்களைப் போன்ற சம்பளம் இங்குள்ளவர்களுக்கும் கிடைக்கும்.

வட்டுக்கோட்டை வட்டாரப் பாடசாலை அதிபர்கள் சங்கக் கூட்டம் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

நிர்வாகத்தின் நடவடிக்கை... வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சண்முகராசா தொடர்ந்து உரையாற்றும்போது அதிபர்கள் ஒவ்வொருவரும் தமது கடமைகளைக் கண்ணியமாகச் செய்தால்தான் ஆசிரியர்களைக் கொண்டு கடமைகளைச் சிறந்த முறையில் செய்விக்க முடியும் என்றார்.

காரைநகர், சுழிபுரம், பண்டத்தரிப்பு வலயப் பாடசாலை அதிபர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அதிபர்கள் சங்கச் செயலாளர் திரு. க. திருநாவுக்கரசு நன்றி நவின்றார்.

உதய சங்கற்பம்

ஆண்டவன் நாமத்தைச் சொல்ல நாம் ஒருபோதும் தயங்கக் கூடாது. எல்லாரும் சேர்ந்து அழைத்தால் அவன் நிச்சயம் நமக்கு அருள் தருவான். ஒற்றைக் கயிறு சுலபத்தில் அறுந்துவிடும். பல இழைகளாலான கயிறு அறுக்கமுடியாதது.

-ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசார்ய சுவாமிகள்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24805 22073
04-02-86 த. பெ. 23

## சமாதான சபைகள்

கோப்பாய் வடக்கு சமாதான சபையின் சாதனை குறித்துச் செய்தி வெளியாகி இருக்கிறது. அந்தச் சபை தனக்குக் கிடைத்த நூறு புகார்களை விசாரித்தது. அதில் 91 பிணக்குகளைச் சுமுகமாகத் தீர்த்து வைத்தது என்பதே அந்தச் சாதனையாகும்.

சமாதான சபைகள் மக்களின் பிணக்குகளுக்குக் கஷ்டமின்றியும் நேரகாலத்தோடும் தீர்வு காணும் ஸ்தாபனங்கள்.

குடும்பச் சண்டை, எல்லைப் பிணக்கு, கடன் கொடாமை போன்ற சிறுசிறு தகராறுகளுக்கு எல்லாம் மக்கள் நீதிமன்றங்களுக்குச் செல்வதைத் தவிர்ப்பதற்குச் சமாதான சபைகள் உதவுகின்றன.

அந்தந்த ஊரில், கிராமத்தில், குறிச்சியில் உள்ள வயதில் மூத்தவர்கள், நியாய அநியாயம் தெரிந்தவர்கள், சமூக நலன் விரும்பிகள், படித்த இளைஞர்கள் சேர்ந்து இந்தச் சபைகளை அமைத்து வருகிறார்கள்.

சட்டத்தை அமுல் செய்யும் பொலீஸ் சேவை இப்போது தமிழ்ப்பகுதிகளில் பூரணமாக ஸ்தம்பித்துவிட்டது. அதனால் சிறு தகராறுகளுக்கு எல்லாம் மக்கள் நேராக நீதிமன்றம் செல்ல இயலாது. அது அவர்களின் நேரத்தையும் பணத்தையும் வீணாக்கும் முயற்சியாகும். அத்தோடு நீதிமன்றங்களுக்கும் பெரும் வேலைப் பளுவைக் கொடுக்கும்.

ஆகவே சமாதான சபைகள், தொண்டர் ஸ்தாபனங்களாக இருப்பினும் அவற்றின் பணி முக்கியத்துவமானது.

அந்தந்தப் பகுதிகளில் மக்கள் சமாதானமாக வாழ்வதற்கு உதவும் பெரும் பொறுப்பும் அவற்றையே சார்ந்துள்ளது.

சமாதான சபைகளில் பணிபுரிவோர் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடங்கொடாது நடுநிலை நின்று நீதியைநிலைநாட்ட வேண்டும்.

நீதிமன்றங்கள் பெரும்பாலும் சட்டத்தை அனுசரிக்க வேண்டியவை. ஆனால் சமாதான சபைகள் மனச்சாட்சியை அடிப்படையாக வைத்தே தீர்ப்பு வழங்குகின்றன. நீதிமன்றங்கள் சட்ட ரீதியாக அந்தஸ்தில் உயர்ந்தவை. சமாதான சபைகள் பக்கசார்பில்லாத தீர்ப்புகளை வழங்கினால் மட்டுமே அவற்றுக்கு மக்கள் மத்தியில் மதிப்பும் அபிமானமும் அந்தஸ்தும் ஏற்படும். இதனை உணர்ந்து செயற்படுவது சமாதான சபை உறுப்பினர்களின் கடமை.

தமிழ் மக்கள் மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சிறு சிறு சச்சரவுகளில் ஈடுபட்டு அவர்கள் வாழ்க்கையைச் சீர்கெடுக்கக் கூடாது.

அதற்கு உதவும் விதத்தில் சமாதான சபைகள் நேர் வழியிலும் நிதானத்துடனும் நடந்து கொண்டால் மக்களுக்கு நீதி வழங்க இயலும். புகார்களை நல்ல முறையில் விசாரித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு மன நிம்மதியையும் கொடுக்கலாம். அது கோடி புண்ணியமாகும்.

கிராமங்களில் மக்களுக்கு நியாயம் கிடைப்பதற்கு சமாதான சபைகள் பேருதவி புரிய வேண்டும். அவர்கள் சமாதான வாழ்வு வாழ உதவ வேண்டும். அதுவே எமது வேணவா.

# மாவிட்டபுரத்தில் கண் பரிசோதனை

காங்கேசன்துறை, பெப். 4

மேற்கு ஜெர்மனியிலிருந்து பெறப்பட்ட இலவச மூக்குக் கண்ணாடிகளை வழங்குவதற்காக மாவிட்டபுரம் லயன்ஸ் கழகம் கண் பரிசோதனை நடத்தியது. ஆய்வில் இப்பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்டோர் கண் பார்வை குறைந்தவர்களென கண்டுபிடிக்கப்பட்டது.

பார்வை குறைந்த ஏழை மக்களுக்கு வழங்குவதற்காக மாவிட்டபுரம் லயன்ஸ் கழகத்துக்கு மேற்கு ஜெர்மனியிலிருந்து ஒரு தொகைமூக்குக் கண்ணாடிகள் கிடைத்துள்ளன.

இவற்றை வழங்கும் பொருட்டு மாவிட்டபுரம் லயன்ஸ் தையல் பயிற்சி நிலையத்தில் லயன்ஸ் கழகத்தினர் கண் பரிசோதனை ஆய்வுக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

யாழ். ஆஸ்பத்திரியின் வைத்திய நிபுணர் திரு. எஸ். வேலாயுதம் இந்த ஆய்வை ஆரம்பித்து வைத்தார்.

கண் பார்வை ஆய்வு நிபுணர் திரு. எம். எம். அனெஸ் இந்த ஆய்வில் கலந்து கொண்ட பொது மக்களைப் பரிசோதனை செய்தார்.

இந்த ஆய்வுக்கான ஏற்பாடுகளை மாவிட்டபுரம் லயன்ஸ் கழக தலைவர் திரு. ஏ. வி. சர்மா முன்னாள் தலைவர் திரு. ஆர். மனோகரன், செயலாளர் திரு. எஸ். ஜெகதீசன், பொருளாளர் திரு. ஏ. சண்முகநாதன். லயன்ஸ் பிரமுகர்கள், திரு. மு. சிவராசா, திரு. வேல்முருகு ஆகியோரும் மேற்கொண்டிருந்தனர்.

## நூலகம்

நாகர்கோயில், பெப்.4

குடத்தனையில் சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் புதிய பொதுசன நூலகம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதி 1986 ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பில் சுதந்திரதினத்தை ஒட்டி பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

மட்டக்களப்பு, பெப். 4

மட்டக்களப்பில் சுதந்திரதினத்தை ஒட்டி பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வெபர் விளையாட்டரங்கில் சுதந்திரதினக் கொண்டாட்டம் நடைபெற உள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் திருமதி ரங்கநாயகி பத்மநாதன் வைபவத்துக்குத் தலைமை வகிப்பார்.

# றொக்கட்லோஞ்சர் தாக்குதல்களால் மரங்கள் முறிந்தன

உருத்திரபுரம், பெப்.4

வவுனியாவிலிருந்து கிளிநொச்சி முகாமுக்கு வந்த ஆயுதப்படையினர் மேற்கொண்ட றொக்கட் லோஞ்சர் தாக்குதல்களினால் கிளிநொச்சி கண்டி வீதியிலுள்ள பாரிய மரங்கள் பல முறிந்து விழுந்து காணப்பட்டன.

உதிரிவேங்கை வைரவர் கோயில் விக்கிரகமும் சேதமடைந்து காணப்பட்டது.

பல வீடுகள் சேதமடைந்தன.

ஹெலிக்கொப்டர் தாக்குதலால் சேதம் அடைந்த வீடுகளைக் கணக்கெடுக்கும் பணியில் கிளிநொச்சி பிரஜைகள்குழு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

கல்மடுநகர் மோதலின் போது மரணமானவர்களையும், பாதிக்கப்பட்ட வீடுகளையும் கிளிநொச்சி பிரஜைகள்குழுச் செயலாளர் திரு. ரி. ஸ்ரீஸ்கந்தராசா, பொருளாளர் ரி. எஸ். தர்மலிங்கம், உபதலைவர் டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி, திரு. எஸ். கோபால் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

# பாடசாலைகளை இராணுவ முகாம்களாக மாற்றும் திட்டம்

## மகஜரில் மாணவர் குற்றச்சாட்டு

நல்லூர், பெப். 4

பாடசாலைகளை இராணுவ முகாம்களாக்கும் அரசின் திட்டம், பாதுகாப்பு வலயச் சட்டத்தினால் தொடக்கி வைக்கப்பட்டிருக்கிறது.

தேசிய மாணவர் மன்றத்தினால் நேற்று மேலதிக அரசாங்க அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ஸ்ரீலங்கா அரசின் அடக்குமுறைச் சட்டங்கள் மாணவரை நேரடியாகப் பாதிப்பவையாக அமைந்து வருகின்றன.

கைது செய்யப்பட்டும் தடுத்து வைக்கப்பட்டும் மாணவர் சமுதாயம் இன்று முழுமையாகப் பாதிக்கப்படும் நிலை தோன்றியுள்ளது.

இன்று அமுல் செய்யப்பட்டு இருக்கும் பாதுகாப்பு வலயச் சட்டத்தினால் பல பாடசாலைகள் மூடப்படும் அபாயம் தோன்றியுள்ளது.

எந்நேரமும் பாடசாலைகள் தாக்கப்படலாம் என்ற பீதி மாணவரிடையே ஏற்பட்டிருக்கிறது.

பாடசாலைகளை இராணுவ முகாம்களாக்கும் அரசின் திட்டம் இப்பாதுகாப்பு வலயச் சட்டத்தினால் தொடக்கி வைக்கப்பட்டு உள்ளது என்பது பொதுக்கருத்தாகும்.

எனவே மாணவராகிய நாம் பாதுகாப்பு வலயச் சட்டத்தையும் ஏனைய அடக்குமுறைச் சட்டங்களையும் எதிர்த்து அவற்றை நீக்கும்படி அரசைக் கோருகிறோம்.

இப்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுன்னாகத்தில் மீண்டும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்த திட்டம்

சுன்னாகம், பெப். 4

சுன்னாகத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றும் எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற உள்ளன.

சுன்னாகம் பிரஜைகள் குழு ஒழுங்கு செய்துள்ள இந்த ஊர்வலத்திலும், பொதுக்கூட்டத்திலும் தொழிற்சங்கங்கள் ஆசிரியர்கள் – மாணவர்கள் வர்த்தகர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கானோர் பங்கு பற்றுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இராணுவ அடக்குமுறைக்கு எதிராகவும் – சுன்னாகத்தில் இடம்பெற்ற பீரங்கித் தாக்குதலைக் கண்டித்தும் – மனித சுதந்திரத்தை பேணுமாறு கோரியுமே ஆர்ப்பாட்ட ஊர்வலத்தினை ஒழுங்கு செய்துள்ளோம் என சுன்னாகம் பிரஜைகள் குழுப் பிரமுகர் ஒருவர் உதயனிடம் தெரிவித்தார்.

## அமைதி வேண்டி புராண படனம்

காங்கேசன்துறை பெப்.4

நாட்டில் அமைதியும் சமாதானமும் வேண்டி மாவிட்டபுரம் வீணியவரை அம்பாள் தேவஸ்தானத்தில் புராணம் ஓதுதல் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி தேவஸ்தான ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ அ. துரைச்சாமி ஐயர் தலைமையில் இது நடைபெறுகிறது.

# 4 மணிநேர தேடுதலில் 60 பேர் கைது

மட்டக்களப்பு, பெப். 4

மட்டக்களப்பில் மாமாங்கம், அமிர்தகழி, கூளாவடிக் கொலனி ஆகிய பகுதிகளில் ஆயுதப் படையினர் கடந்த ஞாயிறு பகல் தேடுதல் நடத்தினர்.

காலை 8 மணி முதல் 12 மணி வரை இத் தேடுதல் நடத்தப்பட்டது.

'முசமூடி' மனிதர் முன்னர் ஆஜர் செய்யப்படுவதற்காக 60 பேரை படையினர் அழைத்துச் சென்றனர்.

# வடபகுதி ரயில் கட்டண உயர்வு அநீதியானது

## பயணிகள் சங்கம் மகஜர்

காங்கேசன்துறை, பெப். 4

வடபகுதி ரயில் பயணிகளுக்கு மட்டும் கட்டண உயர்வு ஏற்படுத்தப்பட்டது நீதியானதல்ல, ஆகவே இந்த மேலதிக கட்டண உயர்வை வாபஸ்பெற ரயில்வே பகுதியினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடபிராந்திய பயணிகள் நலன்புரிச் சங்கம் ரயில்வே பகுதியினரை மேற்கண்டவாறு கோரியுள்ளது.

ரயில்வே பகுதி பொது முகாமையாளருக்கு மேற்படி சங்கத்தலைவர் திரு. எஸ். குமாரசாமி மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

வடபகுதி ரயில்சேவையில் ஈடுபடும் ஊழியர்களுக்கு விசேஷ அலவன்ஸ் வழங்குவதற்காக வடபகுதி ரயில் பயணிகளிடமிருந்து மேலதிக கட்டணம் அறவிடப்படுவது மிகவும் அநீதியானது.

பொதுமக்களுக்கு பணியாற்ற வேண்டிய ஒரு ஸ்தாபனம் இப்படி ஓரவஞ்சகமாக ஒரு பகுதி மக்களுக்கு நிர்ப்பந்தம் ஏற்படுத்துவது நல்லதல்ல.

இது வடபகுதி பயணிகளை பெரிதும் புண்படுத்துகிறது. ஆகவே இந்த மேலதிக கட்டணத்தை ரத்துச் செய்ய வேண்டும்.

இப்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சமய சிந்தனைகளில்

### கும்பாபிஷேகம்

மானிப்பாய் தெற்கு கட்டுடை அரசடி விநாயகர் கோயில் புனருத்தாரண வேலைகள் முடிந்து விநாயகப் பெருமானுக்கும் ஏனைய மூர்த்திகளுக்கும் மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 42 நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளது.

மண்டலாபிஷேகத்தை அடுத்து மார்ச் 14ஆம் திகதி சங்காபிஷேகமும் உற்சவமும் நடைபெற இருப்பதாகவும் மண்டலாபிஷேகத்தில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் உடனடியாக மேற்படி கோயில்தேவஸ்தானத்தாருடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

88 Aug. A/L
கலை, வர்த்தகம்
ஆரம்பம்:
05 - 02 - 1986 (புதன்-4.00)
NIRU Tuition Centre
Station Road, KONDAVIL.
Branch: KOKUVIL.

உதயன்

04. 02. 1986

88 Aug. A/L வகுப்புக்கள்
Maths - A. பத்மநாதன்
Physics - சொர்ந்தி
Chemistry - செல்வா
Zoology - ஞானேந்திரன்
Botany - பாலா
ஆரம்பம்- 05 - 02 - 1986 (புதன்-4.00)
NIRU Tuition Centre
Station Road, KONDAVIL.

# இனவாதம் பரப்புவதில்

# ஐ. தே. க - ஸ்ரீ. ல. சு. க. போட்டி

## கொல்வின் கூறுகிறார்

கொழும்பு, பெப். 4
இனவாதத்தை முன்னெடுத்துச் செல்வதில் தான் இன்று ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக்கட்சியும் மோதுகின்றன.

நாட்டின் அரசியலில் இருந்து இந்த இரண்டு அரசியல்கட்சிகளும் அகற்றப்படவேண்டும்.

அப்பொழுதுதான் நாட்டு மக்களுக்கும் விமோசனம் ஏற்படும்.

இப்படி லங்கா சமசமாஜக்கட்சித் தலைவர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா கூறினார்.

கொம்பனித் தெருவில் நடந்த பொதுக் கூட்டத்தில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா பேசினார்.

இக்கூட்டத்தை கம்யூனிஸ்ட்கட்சி, மக்கள் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி ஆகியன ஒழுங்கு செய்திருந்தன.

டாக்டர் கொல்வின் ஆர். டி.சில்வா தொடர்ந்து பேசுகையில்—

இன்று நாட்டில் கொலை, கொள்ளைகள் மோசமாக இடம்பெறுகின்றன.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை.

தமிழ்இளைஞர்கள் ஆயுதங்களைப் போட்டுவிட்டு வந்தால் தீர்வு காணப்படும் என்று அரசு கூறுகிறது.

இனவாதத்தைப் பரப்புவதில் யு என். பிக்கும் சுதந்திரக்கட்சிக்கும் இடையே பலத்த போட்டி ஏற்பட்டுள்ளது என்று சொன்னார்.

கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச்செயலாளர்திரு. கே பி. சில்வா பேசுகையில் சொன்னதாவது;

பொதுத்தேர்தல்ஒன்று நடத்தப்படுவதற்கு முன்பு அரசமைப்புச் சட்டத்தின் 6ஆவது திருத்தம் வாபஸ் வாங்கப்படவேண்டும்.

பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று கோரும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, 6ஆவது திருத்தத்தை நீக்கவேண்டும் என்று சொல்வது கிடையாது—

இப்படி திரு. சில்வா சொன்னார்.

## விடுதலை செய்ய கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 4
கடந்த மாதம் 30ஆம் திகதி அரியாலையில் வைத்து இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்ட க. செல்லையாவை விடுதலை செய்யுமாறு அவரது மனைவி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமக்குப் பன்னிரண்டு பிள்ளைகள் என்றும் அவர்களில் ஏழுபேர் பெண்கள் என்றும் தமது கணவர் தவறு செய்திருந்தால் அவரை மனிதாபிமான அடிப்படையில் மன்னிக்குமாறும் திருமதி பூமணி செல்லையா கேட்டிருக்கிறார்.

## இ. போ. ச. ஊழியர் மன்னாரில் கடத்தப்பட்டார்

யாழ்ப்பாணம், பெப்.4
வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் மன்னார் டிப்போவைச் சேர்ந்த சாரதி ஒருவர் நேற்றுக்காலை சுமார் பத்து மணியளவில் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டார்.

எட்வின் குருகே என்பவர் போக்குவரத்துச் சபை ஊழியராக இருந்த போதிலும், பாதுகாப்புப் படையினர் பாவிக்கும் பஸ் சாரதியாகவே பணி புரிவதுண்டு. தமது சம்பளத்தைப் பெறுவதற்காக டிப்போ வந்தபோது கடத்தப்பட்டார்.

இதற்கிடையில் பாதுகாப்புப் படையினர் விமானத்திலிருந்து சுட்டதில் வீதியால் சென்று கொண்டிருந்த இருவர் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் மன்னாரில் இருந்து ஆறுமைல் தொலைவில் உள்ள கரிசல் என்ற இடத்தில் இடம்பெற்றது.

இச் செய்தி எழுதப்படும் வரை இறந்தவர்கள் அடையாளம் காணப்படவில்லை.

## மலையகத்துக்கு இணைப்பு அதிகாரி

கொழும்பு, பெப். 4
மலையகத்தில் பரவும் வன்செயல்களைக் கட்டுப்படுத்த இணைப்பு அதிகாரி ஒருவரை ஜனாதிபதி ஜெயவர்த்தனா நியமித்துள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் பிரதிமா அதிபர் திரு. லியோ பெரேராவே அந்த இணைப்பு அதிகாரி.

நுவரெலியா மாவட்ட இணைப்பு அதிகாரியாக இவர் பணியாற்றுவார்.

## வயாவிளான் வித்தியாலயம் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 4
பலாலிச் சம்பவங்கள் காரணமாக கடந்த 10 நாட்களாக தற்காலிகமாகப் பூட்டப்பட்டிருந்த வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் நாளை புதன்கிழமை மீண்டும் ஆரம்பமாகும்.

## வவுனியா...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
நகரம், மன்னார் வீதி, ஆஸ்பத்திரிவீதி போன்ற இடங்களில் காலையிலும், மாலையிலும் தேடுதலில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்றைய சம்பவத்தில் ஐந்துபேர் கைது செய்யப்பட்டனர்.

பாடசாலை மாணவர்கள் உட்பட 450 பேர் தொடர்ந்து பாதுகாப்பில் வைக்கப்பட்டு விசாரணை நடைபெற்றுவருகிறது.

## யுரேனஸ் கிரகத்தை 10 சந்திரன்கள் சுற்றி வருகின்றன

நியூயோர்க், பெப். 3
யுரேனஸ் கிரகத்தை 10 சிறு சந்திரன்கள் சுற்றி வருகின்றன. 11 வளையங்களும் உள்ளன.

யுரேனஸ் கிரகத்தில் 17 மணித்தியாலங்கள் கொண்டது தான் ஒரு நாள்.

அமெரிக்க விண்வெளிக்கப்பல் வொயேஜர் இத்தகவலை அனுப்பியுள்ளதாக நாஸா அறிவித்துள்ளது

யுரேனஸ் கிரகத்தைச் சுற்றி வலம் வரும் 5 பெரிய சந்திரன்களை வொயேஜர் செயற்கைக் கோள் ஏற்கனவே படம் பிடித்து அனுப்பியது

இக்கிரகத்தைச் சுற்றி உள்ள 11-வது வலயம் 3,000 கிலோ மீட்டர் அகலமானதாக இருக்கிறது. கிரகத்தில் இருந்து 1,200 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது

வொயேஜர் கோள் 1977 இல் அனுப்பப்பட்டது. நெப்டியூன் கிரகத்தை நோக்கி மணிக்கு 50,000 கி. மீட்டர் வேகத்தில் தற்சமயம் வொயேஜர் சென்று கொண்டு இருக்கிறது

1989 ஆம் ஆண்டு ஆகஸ்டில் வொயேஜர் நெப்டியூனைச் சென்று அடையும்.

## தினமும் பிடி அரிசி தந்து உதவுங்கள்

### அன்னையர் முன்னணி கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 4
தினமும் பிடி அரிசி ஒதுக்கி வைத்து அகதிகளுக்கு உதவுங்கள்.

இப்படி அன்னையர் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

வேண்டுகோளில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

இடம் பெயர்ந்து வந்தோர் தந்தை செல்வா அகதி முகாமில் (கச்சேரி - நல்லூர் வீதி) தங்கி இருக்கின்றனர்.

அவர்களுக்கு நிதி, உணவு, உணவுப்பொருள்கள், மருந்து வகைகள், தளபாடங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகளைத் தந்து உதவுங்கள்.

தினமும் பிடி அரிசி ஒதுக்கி வையுங்கள். அடையாளக் கார்ட்டுடன்வரும் தொண்டர்களிடம் அரிசியை ஒப்படையுங்கள்.

அகதி முகாமில் தினமும் மாலை 5 மணியளவில் கூட்டுப்பிரார்த்தனை பஜனை நடத்துவதற்கு கிறிஸ்தவ, இந்து ஸ்தாபனங்கள் முன்வர வேண்டும். முன்வரும் ஸ்தாபனங்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

சமைக்கப்பட்ட உணவு தர விரும்புவோர் அது பற்றி நேரகாலத்தோடு அறிவித்தால் வீண் விரயங்களைத் தவிர்க்கலாம்.

இப்படி அன்னையர் முன்னணி வேண்டுகோளில் கூறியுள்ளது

## மாணவர்கள் பேரணி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
இருந்து ஆரம்பிக்கப்பட்ட பேரணியும், யாழ் இந்துக்கல்லூரியில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட பேரணியும் முறையே ஆஸ்பத்திரி வீதி பலாலி வீதியூடாக வந்து வேம்படிச் சந்தியில் இணைந்தன.

பின்பு ஊர்வலம் ஆஸ்பத்திரிவீதி, கஸ்தூரியார்வீதி, மின்சாரநிலைய வீதி, மணிக்கூட்டுவீதி, விக்ரோறியாவீதி,பலாலி வீதி வழியாக வந்து மீண்டும் ஆஸ்பத்திரிவீதியூடாக யாழ் செயலகத்தை நோக்கிச் சென்றது.

பேரணி ஆஸ்பத்திரி வீதியால் செயலகம் நோக்கிச் சென்று கொண்டிருந்த பொழுது யாழ் ரயில் நிலையத்துக்கு மேலால் ஹெலிக்கொப்டர் ஒன்று தாழப் பறந்தது அச்சமயம் மாணவர்கள் ஆக்ரோஷமாக கோஷங்களை எழுப்பினர்

12.15 மணிக்கு செயலகத்தை அடைந்த பேரணி அங்கு ''தேசிய மாணவர் மன்றம்'' என எழுதப்பட்ட கொடியை யாழ் செயலகக் கொடிக்கம்பத்தில் பறக்கவிட்டது.

பின்னர் தேசிய மாணவர் மன்ற பிரதிநிதி ஒருவர் மேலதிக அரசாங்க அதிபர் திரு க. இராமநாதரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தார்.

மகஜரைப் பெற்றுக்கொண்ட மேலதிக அரசாங்க அதிபர் அங்கு பேசுகையில்; என்னிடம் கையளிக்கப்பட்ட இந்த மகஜரை உயர் அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கவுள்ளேன் எனத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து மாணவப்பிரதிநிதிகள் அங்கு கருத்துரை நிகழ்த்தினர்கள்.

## எழுப்பப்பட்ட...

(1-ம் பக்க தொடர்ச்சி)
வையாதே, பாதுகாப்பு வலயத்தை அகற்று''

''இராணுவமே வாபஸ் பெறு''

''மாணவர் கல்விக் கூடங்கள் மரணக் கூடங்கள் அல்ல''

''மாணவியரே அணி திரள்வீர்''

''பேனாவின் சக்தியை துப்பாக்கி அறியுமா''

''கோட்டை மதில் வீரமாம் வெளியில் வந்தால் ஓட்டமாம்''

''பாடசாலைகளுக்கு 'ஷெல்' அடியாதே''

''பாதுகாப்பு வலயம் அப்பாவி மக்களை கொலை செய்யும் திட்டம்''

## பங்குபற்றிய. .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
இந்துக் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி, நிருக் குடும்ப ... (தமிழ்), திருக்குடும்ப கன்னியர் மடம் (ஆங்கிலம்), வேம்படி மகளிர் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, பெரியபுலம் மகாவித்தியாலயம், யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி.

## புதைந்த...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
ந்த திருமதி பாரதி சிவதாசன், இவரது ஒன்றரை வயதுப் பெண் குழந்தை சயணி ஆகியோர் கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ்மூலம் அனுப்பப்பட்டனர்.

இதனைத் தவிர வேறு பலர் தனியார் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதனைவிட கிளிநொச்சிக் குளத்தடியில் பாலம் ஒன்று குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது. இதனால் வட்டக்கச்சி கல்மடு வாகனப் போக்குவரத்துகள் தடைப்பட்டுள்ளன.

பல வாழைத் தோட்டங்கள் தென்னந்தோட்டங்கள் சேதமுற்றுள்ளன. ஞாயிறன்று கிளிநொச்சியில் ரயிலை மறித்து ஏறிய இராணுவம் முறிகண்டிவரை சென்று பின்னர் கண்டி வீதியூடாக நடைபவனியாக துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்துக்கொண்டு முகாமுக்கு வந்தது.

ஞாயிற்றுக்கிழமை நடந்த சம்பவங்களில் ஹெலிக்கொப்டர் ஒன்று போராளிகளால் சுடப்பட்டது

## தோட்டத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
டனர்.

இதனிடையில் இன்று அமைச்சர் தொண்டமான், ஹட்டன், பொகவந்தலாவை, நோர்வூட் ஆகிய இடங்களில் இ. தொ. கா. அதிகாரிகள்,மாதர்சங்கத் தலைவிகள் ஆகியோரைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

அமைச்சருடன் திரு. செல்லச்சாமி, திரு ஜெயா பெரிசுந்தரம்ஆகியோரும் செல்வர்.



### 10 ஆவது நினைவஞ்சலி

தங்கவேலு இரவிந்திரன்
தோற்றம்: 14-11-1958 மறைவு: 27-1-1976
உங்கள் ஆத்மா சாந்தி அடைய வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கும்
அம்மா, அப்பா, பெரியப்பா, பெரியம்மா, சகோதரர்கள், சகோதரிகள்.
நெடிலித் தெரு, துன்னாலை தெற்கு, கரவெட்டி.

# விளையாட்டரங்கு

## வை. எம். சி. ஏ. அணி வென்றது

### கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 4
யாழ் வை. எம். சி. ஏ நடத்தும் கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி நேற்று ஆரம்பமானது. யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நேற்று நடைபெற்ற முதல் போட்டியில் வை. எம். சி. ஏ அணி வெற்றி பெற்றது.

யாழ் வை. எம். சி. ஏ அணி யாழ் பல்கலைக்கழக அணியை 51க்கு 22 என்ற புள்ளி அடிப்படையில் தோற்கடித்தது.

ஆட்ட நேர இடைவேளைவரை 18க்கு 4 என்ற புள்ளிகள் அடிப்படையில் வை. எம். சி. ஏ அணி முன்னணியில் நின்றது.

இன்றைய தினம் போட்டிகள் நடைபெறமாட்டா.

இச்சுற்றுப் போட்டிகள் இரண்டாவது ஆட்டம் நாளை நடைபெறும்.

## ஸ்கந்தா விளையாட்டுக் கழகம்

யாழ்ப்பாணம், பெப் 4
கந்தரோடை ஸ்கந்தா விளையாட்டுக் கழகத்தின் புதிய நிருவாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

தலைவர்:செ வைத்தீஸ்வரன்.

உபதலைவர்: பா. ஞான ஆனந்தன்.

செயலாளர்:க நாகேஸ்வரன்.

உபசெயலாளர்; செ, மதிவாணன்.

பொருளாளர்: சி.மனோகரதாஸ்.

பொதுசனத்தொடர்பு: அதிகாரி. சிவகுமார்.

## பரந்தனில் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், பெப். 4
பரந்தனில் நடைபெற இருக்கும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பரந்தன் இளைஞர் கழகம் இந்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிக்கான ஒழுங்குகளைச் செய்து வருகின்றது.

11 பேர் பங்கு கொள்ளும் இந்தச் சுற்றுப் போட்டிக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சகல விளையாட்டுக் கழகங்களும் விண்ணப்பிக்கலாம்

இந்தச் சுற்றுப் போட்டிக்கான விண்ணப்பங்களை 10 - 2 - 1986க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்படுகிறது.

தலைவர், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற இளைஞர் கழகம், இளைஞர் வட்ட காரியாலயம், குமரபுரம் வீதி, பரந்தன்,

## முல்லைத்தீவில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
உட்பட இரண்டு சிறு விமானங்கள் பயங்கர சத்தத்துடன் குண்டுகளை வீசின.

முல்லைத்திவு கடலில் நிற்கும் பீரங்கிக் கப்பல்களிலிருந்தும் நேற்று குண்டுகள் வெடிக்கப்பட்டன.

நேற்று மாலை இடம் பெற்ற சமரில் ஆயுதப் படையினரின் முகாம் 'சென்றியில்' அடுக்கி வைக்கப்பட்டிருந்த மண்மூடைகள் போராளிகளின் ரொக்கெட் லோஞ்சர் மூலம் சிதறியதாகவும் இதனால் நான்கு ஆயுதப்படையினர் காயம் அடைந்தனர் என்றும் கூறப்படுகிறது.

## இலங்கையின்.

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
கொண்டே அமையும்

இலங்கையின் மனநிலையை அடிப்படையாக வைத்து இந்தியா இது சம்பந்தமாக முடிவு செய்யும் - என்றார்.

வெளிநாடு பயணமாகுமுன்னர் திரு பகத் புதுடில்லியில் வைத்துச் செய்தியாளரிடம் பின்வருமாறு தெரிவித்தார்.

இராணுவத் தீர்வை ஜனாதிபதி ஜெயவர்த்தனா வலியுறுத்தி வருவதால் தான் தமிழீழபோராளிக் குழுக்கள் மத்தியில் நம்பிக்கை இன்மை உருவாகி உள்ளது.

சமீபத்திய நிகழ்ச்சிகள் தீர்வு காண உகந்ததாக இல்லை என்றார்.

### வடக்கில் துருப்புகள்

இதனிடையில் இலங்கை அரசு வடமாகாணத்தில் கொடூரமான நடவடிக்கைகளை எடுத்துவரதிட்டமிட்டுள்ளதாக தமிழ் ஈழ விடுதலை இயக்கத் தலைவர் ஸ்ரீ சபாரத்தினம் அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

கிளிநொச்சி மற்றும் மலைநாட்டுத் தேயிலைத் தோட்டங்களில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதும் அரசின் எண்ணத்தை எடுத்துக் காட்டுகிறது.

ஜெயவர்த்தனா, அரசியல் தீர்வு காண விரும்பவில்லை. இராணுவத்தீர்வு காணுவதையே அவர் விரும்புகின்றார்.

இப்படி ஸ்ரீ சபாரத்தினம் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## "இந்தியாவுக்கு ஓடு" என்ற கோஷத்துடன் மலையகமக்களை தாக்குகிறார்கள்

### ஈரோஸ் அறிக்கை

சென்னை,பெப்.4
பொகவந்தலாவை,டிக்கோயா,ஹட்டன்,நோர்ட்டன் பகுதிகளில் கலகக்காரர்கள் ''இந்தியாவுக்குப் போ'' (''பழையங் இந்தியாவட்ட'') என்ற கோஷத்துடனேயே கலவரங்களில் ஈடுபடுகின்றனர்.

இப்படி ஈழப் புரட்சி அமைப்பு (ஈரோஸ்) விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் கூறப்படுவதாவது:-

பொகவந்தலாவை,டிக்கோயா, ஹட்டன்,நோர்ட்டன் பகுதிகளில் ''குண்டர்கள்'' குழுக்கள் அரசாங்க ஆதரவுடன் தமிழ் மக்கள் மீது வன்செயல்களை புரியத்தொடங்கின.

அதன்விளைவாகவே அப்பகுதி மக்கள் திரளாக எழுந்து பொலிஸ், இராணுவப் படைகளை முற்றுகையிட நேர்ந்தது.

இந்தக் குண்டர்களில் இருவர் அரசாங்க தொழிற்சங்கம் ஒன்றின் முக்கியஸ்தர்களாக இருந்ததை நேரில் அவதானிக்க முடிந்தது.

ஆட்சியாளர்கள் ஒருபுறம் நாடற்றிருந்த தமிழ் பேசும் மக்களுக்குக் குடியுரிமைவழங்கிவிட்டதாக வெளியே காட்டிக் கொண்டு, மறுபக்கமாக அமைச்சர் ஒருவர் மூலம் வன்முறைகளை ஏவிவிட்டிருக்கின்றனர்.சிலஇடங்களில் சுதந்திரக்கட்சிக்கு சார்பானவர்களும் இவர்களுடன் இணைந்து செயம்படுகிறார்கள்.

சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தமானது1981இல் காலாவதியாகியதைஅடுத்து அக்காலங்களிலும் 83லும் ''இந்தியாவுக்கு ஓடு'' என்ற கோஷமுடனேயே கலவரங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இம்முறையும் கலவரக்காரர்கள் அதே கோஷத்துடன் வன்செயலில் ஈடுபடுகின்றனர். மலையக மக்கள் மலையகத்தை விட தென் இந்தியாவேதமக்கு பாதுகாப்பான பிரதேசமாக எண்ண வேண்டும் என்ற நோக்கத்தையே இந்தக் கலவரம் கொண்டிருப்பதாக உணர முடிகிறது

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## வயலில் படுக்கும்படி..

(1 ம் பக்கத் தொடர்ச்சி
டுக்கு போய்க்கொண்டிருந்தேன்.

வயல்வெளியில் படுத்திருந்த சீருடையினர் என்னை வரும்படி அழைத்தனர். நான் அவர்களிடம் போனேன். அடையாள கார்ட்டை வாங்கிப் பார்த்துவிட்டுக் கொட்டியாவா? எனக் கேட்டனர்.

நான் ஒன்றும் பேசவில்லை. பின்னர் வயல் வெளியினூடாக வந்த வேறு இருவரையும் அவர்கள் அழைத்தனர்

அவர்களை குப்புற படுக்க வைத்தனர்.

எனது சாரம் சேட்டுக்களையும் அவர்கள் கழற்றினர்

பின்னர் என்னையும் அவர்களுடன் சேர்ந்து படுக்கும்படி சீருடையினர் பணித்தனர். நான் அவர்களுடன் படுத்துக் கொண்டேன்.

அப்பொழுது சீருடையினரில் ஒருவர் எம்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்.

பின்னரும் இரண்டு மூன்று தடவைகள் எம்மீது சுட்டுவிட்டு அவர்கள் போய்விட்டனர்.

எனக்கு காலில் சூடு பட்டதால், தவழ்ந்து தவழ்ந்து செல்வபுரம் போனேன்.

எனக்கு முன்னால் சுடப்பட்டவர்களில் ஒருவர் அந்த இடத்திலேயே மரணமாகிவிட்டார். மற்றவர் பின்னர்தான் மரணமானதாக நான் அறிந்தேன்.

கிளிநொச்சியில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தபடியால் படகுமூலம் ஒரு கரையை அடைந்து யாழ் வைத்தியசாலையை அடைந்தோம்.

இப்படி அவர் தெரிவித்தார்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி: 04-02-1986

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org